**அக்டோபர் – 11**

# TNPSC துளிகள்

- 9வது விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுறவின் இடைக்கால அமைச்சரவைக் கூட்டமானது தாய்லாந்து நாட்டில் உள்ள பாங்காக் நகரில் நடைபெற இருக்கின்றது. இது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 4 அன்று பாங்காக்கில் நடைபெறவுள்ள தலைவர்களின் 3வது உச்சி மாநாட்டிற்கு முந்தைய இறுதி அமைச்சரவைக் கூட்டமாகும்.
  - இந்தியாவை மத்திய வர்த்தகத் துறை அமைச்சரான பியூஷ் கோயல் பிரதிநிதித்துவப்படுத்துவார்.

# தேசியச் செய்திகள்

## தடுக்கக்கூடிய தாய் – சேய் இறப்புகள் – சுழிய நிலை

- மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷவர்தன் பல்வேறு மாநில சுகாதார அமைச்சர்களுடன் இணைந்து சுரக்ஷித் மாத்ரித்வா ஆஷ்வாசன் (சுமன்) என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளார்.
- சுமன் என்ற முன்னெடுப்பானது தடுக்கக்கூடிய, தாய் & புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்புகளை சுழிய நிலைக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பொது சுகாதார நிலையத்திற்கு வருகை தரும் ஒவ்வொரு பெண்ணுக்கும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் சேவைகள் மறுக்கப்படும்போது சுழிய சகிப்புத் தன்மையுடன் செயல்படுதல் மற்றும் எந்தவொரு கட்டணமுமின்றி கண்ணியமான, மரியாதைக்குரிய & தரமான சுகாதார சேவைகளை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு முயற்சிக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் மூலம் பொது சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அவர்களுக்கு இலவசப் பிரசவம் மற்றும் அறுவை சிகிச்சை போன்ற வசதிகள் வழங்கப்படும்.
- இதன் மூலம் பிரசவத்திற்குப் பிறகு 6 மாதங்கள் வரை கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு இலவச சுகாதார நலன்கள் வழங்கப்படும்.
- இத்திட்டத்தினால் புதிதாகப் பிறந்த, நோய்வாய்ப்பட்ட குழந்தைகளும் இலவச சுகாதார நலன்களைப் பெற்றுப் பயனடைவர் .

## WHO இன் இந்தியாவிற்கான உத்தி

- உலக சுகாதார அமைப்பானது (WHO - World Health Organisation) இந்திய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற மத்திய சுகாதார அமைச்சகமானது ஒரு உத்தி சார்ந்த செயல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டம் WHO இந்தியாவின் 'தேசிய ஒத்துழைப்பு உத்தி (Country Cooperation Strategy - CCS) 2019–2023: மாற்றத்திற்கான நேரம்' என்று அழைக்கப்படுகின்றது.
- தனது சுகாதாரத் துறையின் இலக்குகளை அடைவதற்கு இந்திய அரசாங்கத்துடன் இணைந்துப் பணியாற்ற WHOக்கு ஒரு உத்தி சார்ந்த செயல்திட்டதை CCS வழங்குகின்றது.
- தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்த சுகாதார அமைச்சகம் மற்றும் அது சார்ந்த பிற

அமைச்சகங்களை WHO எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பதை இந்தத் திட்டம் கோடிட்டுக் காட்டுகின்றது.

## போஷான் வரைபடம்

- ஊட்டச்சத்து குறைபாடுகளைக் கையாளும் முயற்சியின் ஒரு பகுதியாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்படும் பயிர்கள் மற்றும் உணவு தானியங்களை கண்டறிந்திட மத்திய அரசு ஒரு வரைபடத்தை (atlas) உருவாக்கி வருகிறது.
- உள்ளூர் பகுதிகளில் கிடைக்கும் சத்தான புரதச் சத்து நிறைந்த உணவு தானியங்களை ஊக்குவிக்க இந்த வரைபடம் பயன்படுத்தப்படும்.
- போஷான் அபியான் திட்டத்தின் கீழ் மத்திய அரசு "போஷான் வரைபடம்" என்ற புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இது பின்வருவனவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகத் தொடங்கப்பட்டுள்ளது.
    - மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்
    - தீனதயாள் ஆராய்ச்சி நிறுவனம்
    - பில் & மெலிண்டா கேட்ஸ் அமைப்பு
- உலக வங்கியின் உலகளாவிய ஊட்டச்சத்து அறிக்கை - 2018 இன் படி, ஊட்டச்சத்து குறைபாடானது உற்பத்தித் திறன் இழப்பு, நோய் மற்றும் இறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுக்கு ஆண்டுக்கு குறைந்தது 10 பில்லியன் டாலர் செலவாகின்றது.

## அரசு ரயில்வே காவல் துறை இணையதளம் மற்றும் கைபேசி செயலி

- உள்துறை விவகாரங்களுக்கான மத்திய இணையமைச்சரான நித்யானந்த் ராய் மத்திய அரசின் ரயில்வே காவல் துறையின் வலைதளமான "railways.delhipolice.gov.in" மற்றும் "சஹயாத்ரி" என்ற கைபேசி செயலியைத் தொடங்கியுள்ளார்.
- இந்தியா முழுவதிலும் உள்ள ரயில்வே அதிகார வரம்பில் செயல்படும் குற்றவாளிகளின் புகைப்படங்கள் உட்பட குற்றவாளிகளின் தரவுகளை ரயில்வே காவல் துறையின் இணையதளத்தில் பதிவேற்றப்படும்.
- விரைவு பதிலெதிர்புக் குறியீடுகளை (QR) சோதனை செய்து படிக்கவும் அவசர அழைப்பு செய்யவும் இது ஒரு வசதியைக் கொண்டிருக்கும்.

***சஹயாத்ரி***

- கூகுள் வரைபடத்துடன் புவியைக் குறியிடுதல் செய்வதன் மூலம் ரயில்வே பயணிகளுக்கு ஒரு காவல் நிலையத்தின் அதிகார வரம்பையும் அரசு ரயில்வே காவல் துறை அதிகாரிகளின் விவரங்களையும் அறிய சஹயாத்ரி செயலி உதவும்.
- குற்றவியல் தரவுத் தளத்தை நிகழ்நேரத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம் இந்தியா முழுவதிலும் இருந்து பயணிகளின் புகார்களைத் தீர்ப்பதற்கும் குற்றங்களைக் கண்டறிவதற்கும் இது ரயில்வே காவல் துறையினருக்கு உதவ இருக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## சர்க்கரைப் பொருள்கள் கொண்ட பானங்கள் விளம்பரத்திற்கான உலகின் முதலாவது தடை – சிங்கப்பூர்

- வேகமாக வளர்ந்து வரும் நாட்டில் மக்களுக்கு ஏற்படும் நோய்களைக் குறைக்கும் முயற்சியில் மிக அதிக சர்க்கரை பொருள்களைக் கொண்ட அடைக்கப்பட்ட பானங்களுக்கான விளம்பரங்களுக்கு மொத்தமாக தடை விதிக்க சிங்கப்பூர் அரசு திட்டமிட்டுள்ளது.
- மிக அதிக அளவுள்ள சர்க்கரைப் பொருள்களைக் கொண்ட பானங்களுக்கான விளம்பரங்களுக்குத் தடையை அமல்படுத்திய உலகின் முதலாவது நாடு சிங்கப்பூர் ஆகும்.
- சிங்கப்பூரில் நீரிழிவு நோய் மிக அதிகமாக உள்ளது.

## யுனிசெப் மெய்நிகர் நாணய நிதி

- ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிறுவனமான ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியமானது தற்பொழுது மெய்நிகர் நாணயத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொண்ட முதலாவது ஐ.நா. அமைப்பாக உருவெடுத்துள்ளது.
- அமெரிக்க செஞ்சிலுவை சங்கம் போன்ற மெய்நிகர் நாணயத்தில் நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளும் பல உதவி செய்யும் நிறுவனங்களுடன் யுனிசெப் இப்போது இணைகின்றது.
- இது யுனிசெப் மெய்நிகர் நாணய நிதியை நிறுவியுள்ளது. இது பிட்காயின் மற்றும் ஈதர் போன்ற மெய்நிகர் நாணயங்களின் வடிவத்தில் நன்கொடைகளை ஏற்றுக் கொள்கின்றது.
- மெய்நிகர் நாணயங்கள் மூலம் யுனிசெப்பிற்கு பங்களிக்கும் முதல் நிறுவனமாக எத்தேரியம் அறக்கட்டளை இருக்கும்.

## இந்தியா-பாகிஸ்தான் எல்லைகளில் சூரிய காற்றாலைப் பண்ணைகள்

- 2022 ஆம் ஆண்டில் இந்தியா 175 ஜிகாவாட் தூய்மையான ஆற்றலை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த இலக்கை அடைய, பாகிஸ்தானுடனான சர்வதேச எல்லையில் உள்ள தரிசு நிலங்களில் சூரிய மற்றும் காற்றாலைத் திட்டங்களை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தை செயல்படுத்த குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள எல்லைப் பகுதியில் 30 கி.மீ மற்றும் 20 கி.மீ அகலமுள்ள ஒரு பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட எரிசக்தி மின் பூங்காக்கள் ஒவ்வொன்றும் 2,000 மெகாவாட் ஆற்றலை உற்பத்தி செய்யும்.
- எந்தவொரு வாழ்விடமும் இல்லாத தரிசு நிலங்களில் இந்தத் திட்டம் கட்டப்பட்டு வருகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கிடையேயான பயன்பாட்டுக் கட்டணம்

- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது தனது வாடிக்கையாளர்களிடம் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கிடையேயான பயன்பாட்டுக் கட்டணத்தை (Interconnect Usage Charge - IUC) வசூலிக்க இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்தக் கட்டணமானது நிமிடத்திற்கு 6 பைசா என்ற விகிதத்தில் இருக்கும்.
- IUC என்பது தொலைத் தொடர்பு நிறுவனங்கள் தங்கள் உபகரணங்கள், அமைப்புகள் மற்றும் சேவைகளை பிற தொலைத் தொடர்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் இணைக்கும் ஒரு ஏற்பாட்டைக் குறிக்கின்றது.

### *IUC கட்டணங்கள்*

- தற்போது இந்தியாவில் கம்பியற்ற முறையில் தொலைத் தொடர்புகளை ஏற்படுத்தும் சாதனங்களுக்கு மட்டுமே IUC கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன.
- இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமானது (TRAI - Telecom Regulatory Authority of India (TRAI) IUC கட்டண விகிதங்களை நிமிடத்திற்கு 6 பைசா என நிர்ணயித்துள்ளது.
- ஜனவரி 1, 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் IUC கட்டணத்தை பூஜ்ஜியத்திற்கு கொண்டு வர TRAI விரும்புகின்றது.
- அனைத்துத் தொலைத் தொடர்பு நிறுவனங்களும் VoLTEக்கு மாறும் என்று கருதப்பட்டதால் TRAI ஆனது IUCஐ முடிவுக்குக் கொண்டு வருகின்றது.
- ஜியோ முற்றிலும் ஒரு VoLTE வலையமைப்பு (network) ஆகும். ஆனால் வோடபோன் மற்றும் ஏர்டெல் ஆகியவை தங்களது பழைமையான 2G மற்றும் 3G வலையமைப்பையே தொடர்ந்து வழங்குகின்றன.

# மாநிலச் செய்திகள்

## கேரள வங்கி

- இந்திய ரிசர்வ் வங்கியானது கேரள வங்கியை அமைப்பதற்காக கேரள அரசுக்கு தனது இறுதி ஒப்புதலை அளித்துள்ளது.
- கேரள வங்கியானது மாநிலத்தின் மிகப்பெரிய வங்கி அமைப்பாக செயல்பட இருக்கின்றது.
- கேரள மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் (14 மாவட்டங்கள்) உள்ள மாவட்ட கூட்டுறவு வங்கிகள் (மலப்புரம் மாவட்ட கூட்டுறவு வங்கியைத் தவிர்த்து) மாநில அரசின் ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தன.
- இந்தப் புதிய வங்கியானது கேரளாவில் கூட்டுறவுத் துறையை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ளதால், வங்கிகள் இணைப்பிற்கு எதிராக நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் அந்த மாநிலத்திற்கு ஆதரவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2019 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு

- ஆஸ்திரியாவின் பீட்டர் ஹேண்ட்கே என்பவர் 2019 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளார்.
- மனித அனுபவத்தின் தனித்துவத்தை ஆராய்வதில் தனது சிறப்புமிக்க பணிக்காக அவர் இந்த விருதை வென்றுள்ளார்.
- பீட்டர் ஹேண்ட்கேவின் புகழ்பெற்ற சில படைப்புகள் பின்வருமாறு
    - டை ஆங்ஸ்ட் டெஸ் டோர்மன்ஸ் பீம் எல்ஃப்மீட்டர் (1970; தி கோலியின் அனக்சிட்டி அட் தி பெனால்டி கிக்),
    - டை லிங்க்ஷாண்டிஜ் ஃப்ரா (1976; இடது கை பெண்),
    - வுன்ச்லோஸ் அங்லாக் (1972; "விஷ்லெஸ் அன்-லக்"; கனவுகளுக்கு அப்பால் ஒரு துக்கம்).

### *2018 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு*

- ஒத்திவைக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் இலக்கிய விருதுக்கான நோபல் பரிசானது போலந்து எழுத்தாளரான ஓல்கா டோகார்ஸூக்கிற்கு வழங்கப்பட உள்ளது.
- இலக்கியதிற்கான நோபல் பரிசை வென்ற 15வது பெண் ஓல்கா டோகார்ஸுக் ஆவார்.
- இவர் "விமானங்கள்" என்ற தனது படைப்பிற்காக 2018 ஆம் ஆண்டில் சர்வதேச புக்கர் என்ற பரிசையும் வென்றுள்ளார்.
- இவரது பிற புகழ்பெற்ற படைப்புகள் பின்வருமாறு
    - பிரைமுவல் & அதர் டைம்ஸ்
    - Księgi Jakubowe (ஜேக்கப்பின் புத்தகங்கள்).



# விளையாட்டுச் செய்திகள்

## மேரி கோம் - 8வது தங்கப் பதக்கம்

- ஆறு முறை சாம்பியன் பட்டம் வென்ற எம்.சி மேரி கோம் (51 கிலோ) என்பவர் மகளிர் உலக சாம்பியன்ஷிப் வரலாற்றில் மிக வெற்றிகரமான குத்துச் சண்டை வீரராக தன்னைத் தானே மிஞ்சியுள்ளார்.
- இவர் முன் எப்போதும் இல்லாத வகையில் எட்டாவது பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
- மூன்றாம் நிலை வீராங்கனையான மேரி கோம் கொலம்பியாவின் வலென்சியா விக்டோரியாவைத் தோற்கடித்தார்.
- மஞ்சு ராணி (48 கிலோ), ஜமுனா போரோ (54 கிலோ) ஆகியோர் அரையிறுதிப் போட்டியில் நுழைந்துள்ளனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★